திருஞான சம்பந்தப் பிள்ளையார் அருளிய திருக்கோளறு பதிகம்

பொழிப்புரையும் குறிப்புரையும் கூடியது.

## கோளறு திருப்பதிகம்

கோளறு திருப்பதிகம் தேவாரத் திருப்பதிகத்துள் இரண்டாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளது. இதனைத் திருஞான சம்பந்தப் பிள்ளையார் பாடி அருளினார்.

ஒருசமயம் திருஞான சம்பந்தப் பிள்ளையாரும் திருநாவுக்கரசு நாயனாரும் வேதாரணியத் திருப்பதியில் ஒருங்கே தங்கி இருந்தனர். பாண்டி நன் நாடு, சமண மதத்தினரால் பெரிதும் நலிவுற்றிருந்தது. பாண்டிமா தேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும், சம்பந்தப் பிள்ளையாரை பாண்டி நன்நாட்டுக்கு அழைத்தனர். சம்பந்தப் பிள்ளையார் அழைப்பை ஏற்றனர்.

நாவுக்கரசுப் பெருமான் பிள்ளையார் அங்குச் செல்வதை விரும்பவில்லை. “தேவரீர் சிறு பிள்ளை, சமணர் வஞ்சனைக்கோ அளவில்லை. உமக்கு இப்போது கிரகங்கள் வலியிலாவாகும், ஆதலின் தேவரீர் அவ்விடத்துக்கு எழுந்தருள எண்ணுவது ஒண்ணாது” என்று கூறியருளினார்.

பிள்ளையார், பரமசிவன் எம்முடைய சிந்தையே கோயிலாக கொண்டு எழுந்தருளி இருக்கின்றான் நமக்குத் தீங்கு வராது என்று கூறிக் கோளறு திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

சேக்கிழார் சாமிகள் இதனை, “.........பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால், பழுதணைய, தெனப்பகர்ந்து பரமர் செய்ய விரைசெய் மலர்த்தாள் போற்றி புகலி வேந்தா “வேயுறு தோளி” யை எடுத்து விளம்பினாரே” என்று குறிப்பிடுவர்.

## கோளறு பதிகம்

பொது பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
 மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
 உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
 சனிபாம் பிரண்டுமுடனே

ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

மூங்கில் அனைய தோளினை உடைய உமையம்மையாரை, இடப்பால் வைத்தவரும் திருநீலகண்டரும், வீணையை வாசிப்பவரும், சந்திரனையும் கங்கா நதியினையும் திருமுடியில் தரித்தவரும் ஆகிய சிவபெருமான், எனது உள்ளத்தில் புகுந்து இருக்கின்றார். அதனாலே துன்பம் விளைவிக்கும் சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி மற்றும் இராகு கேது என்னும் இரு பாம்புகளும் சிவன் அடியார்களுக்கு குற்றம் அற்று மிகவும் நல்லனவாக அமையும்.

குறிப்புரை:

நாளும் கோளும் = நட்சத்திரங்களும் ஏனைய கிரகங்களும் இறைவன் ஆணைப்படி ஏவல் செய்வனவாம். ஞாயிறு = சூரியன் மிக நல்ல வீணை = மிக்க நன்மை பயத்திற்கு காரணமான வீணை என்க. வீணையில் நின்று நாதம் எழும். நாதம் உலகை தோற்றுவித்தற்கு ஏதுவாம். தடவுதல் = வாசித்தல், வருடுதல் = தடவுதல்: வாசித்தல், ஆசு = குற்றம் பாம்பு இரண்டு. இராகு கேது.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க

எருதேறி ஏழை யுடனே

பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்

உளமே புகுந்த வதனால்

ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்

உடனாய நாள்க ளவைதாம்

அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

எலும்பு, பன்றிக்கோடு, ஆமை ஓடு ஆகிய இவைகள் தமது திருமார்பின் கண்ணே விளங்கவும், அழகிய ஊமத்தமலர் மாலையானது நெஞ்சினிற் புரளவும், திருமுடியில் கங்கா நதியைக் கொண்டும், இடப்பாகம் உமாதேவியாரை வைத்தும் இடபவாகனத்தில் கவர்ந்து திரியும் சிவபிரானார் எனது உள்ளத்தின் கண்ணே அமர்ந்துள்ளார்.

அதனால் தீமை பயப்பனவாகிய ஒன்பதாவது ஆயில்யம் பத்தாவது மகம், பதினாறாவது விசாகம், பதினெட்டாவது கேட்டை, ஆறாவது திருவாதிரை என்னும்

நட்சத்திரங்களும் பிறவும் சிவனடியார்களுக்கு மிக்க அன்புடன் நல்லனவாக அமையும்.

குறிப்புரை:

பிரயாணத்துக்கு ஆகா நாள்கள் விதந்து குறிப்பிடப்பட்டுள்ளன. பஞ்சாங்ககாரர் நட்சத்திரங்கள் 27 ஐயும் பின்வரும் ஒழுங்கில் குறிப்பிடுவர். 1. அஸ்வினி 2. பரணி 3. கார்த்திகை 4. ரோகிணி 5. மிருகசீரிடம் 6. திருவாதிரை 7. புனர்பூசம் 8. பூசம் 9. ஆயில்யம் 10. மகம் 11. பூரம் 12. உத்தரம் 13. அத்தம் 14. சித்திரை 15. சுவாதி 16. விசாகம் 17. அனுசம் 18. கேட்டை 19. மூலம் 20. பூராடம் 21. உத்தராடம் 22. திருவோணம் 23. அவிட்டம் 24. சதயம் 25. பூரட்டாதி 26. உத்திரட்டாதி 27. ரேவதி.

1. என்பு: எலும்பு

இறைவன் எலும்பை அணிதல். தேவர் ஒடுக்கமும் மற்றும் பரமவிட்டுணுக்களின் ஒடுக்கமும் தெரிவிப்பதற்காகும், திருமால் கூர்மமாய் (ஆமையாய்) தோன்றினமையும், அவன் முழுமுதற் கடவுள் அல்லன் என்பதையும் குறிப்பிடற்க்கும் இவை கூறப்பட்டனவாம்.

2. கொம்பு. பன்றியின் கொம்பு.

"புரிநூல் திகழ்மார்பின் நல்ல பன்றியின் கொம்பணிந்து எனப்பின்னும் தேவாரத்தும் கூறப்படுகின்றது. அரக்கன் ஒருவன் நிலவுலகைப் பாய்போற் சுருட்டிக் கொண்டு பாதாளம் சென்றிருந்தான். திருமால் ஒரு பன்றி வடிவெடுத்து அரக்கன் உடலைக் கிழித்து இரத்தத்தைப் பருகி வெறி கொண்டு இருந்தார். சிவபிரானார் அதன் கடைவாய் பல்லைப்பிடுங்கி அதனை அணிந்துக் கொண்டார் என்பர்.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
        உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
        உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
        திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
        அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

சிவபிரானார் தமது செம்மேனியில் ஒளிமிக்க வெண்திருநீற்றினை அணிந்து உமாதேவியாருடன் வெண்ணிறமான இடபவாகனத்தின் மேலே, அழகுமிக்க திருக்கொன்றைப் பூவுடன் சந்திரனையும் தரித்து எனது மனத்தின் கண்ணே

அமர்ந்துள்ளார். கலைமகள் மற்றும் துர்க்கா அரிய நியதியை உடையனவாய் இருப்பினும் அவை திருத்தொண்டருக்கு நல்லனவாம், மிகவும் நல்லனவாம்.

குறிப்புரை:

விடை: இடபம், திலுமாலை இடபமாகச் சிவபிரானார் தாங்கினான். திருவாசகத்துள் “இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ” என்று கூறப்படுகிறது. அட்டதிக்குப்பாலகர், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசாணன் என்போர்.

நெதி. நியதி.

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து

மறையோதும் எங்கள் பரமன்

நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்

உளமே புகுந்த வதனால்

கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்

கொடுநோய்க ளான பலவும்

அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

இளம்பிறைச் சந்திரனை ஒத்த திருநெற்றியை உடைய உமாதேவியாருடன், வடதிசைக்கண் உளதாகிய கைலையில் இருந்து, வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளும் எங்கள் சிவபிரானார், முடியில் கங்கையையும், கொன்றையையும் தரித்தவர்.

அவர் எனது உள்ளத்தின் கண்ணே குடியிருக்கின்றார். அதனால் சினங்கொண்ட இயமனின் அமைச்சனும், அக்கினிதேவனும், அவன் தூதுவர்களும் கொடிய நோய்களாக /////// அவை நன்மை செய்யும். அடியவருக்கு அவை மிகவும் நல்லன செய்யும்.

குறிப்புரை:

அம்பிகையின் நெற்றிக்கு இளம்பிறையை உவமித்தார். இறைவன் வேதம் ஓதுதலை “வேதம் ஓதிவெண்ணூல் பூண்டு……” எனப் பிறிதோரிடத்தும் பிள்ளையார் கூறுவர். மணிவாசகப் பெருமானும் “மறைபயின்ற வாசகர் என்பர்.

வடபால் என்பதனை அறிஞர் பட்டுசாமி ஓதுவார் வடஆல் இருந்து எனப்பிரிப்பர். தென்முகத் தெய்வமாகிய தட்சணாமூர்த்தியும் வல்லார்கள் நால்வர்கள்

மறையினைச் சொல்லாமற் சொன்ன வரலாறும் உண்டு. காலன் இங்கு இமனுடைய அமைச்சனை உணர்த்திற்று.

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

பாற்கடல் கடைந்த போது, எழுந்த விடத்தைத் தேவாதியருக்காக உண்டு அதனைத் தமது மிடற்றில் வைத்த திருநீலகண்டரும், எமது தலைவரும் ஆகிய சிவபிரானார், அம்மையாருடன் எருது வாகனத்தில் திரியும் பரமபிதா ஆவார். அவர் எமது உள்ளத்தில் புகுந்து கோயில் கொண்டுள்ளார். ஆயகாரணத்தினாலே, கொடுஞ்சினம் பூண்ட அவுணாதிகளும், அச்சம் தரும் இடியேறு, மின்னல் என்பனவும், மிகுதியான பூதங்களும் எல்லாம் அடியார்களாகிய எம்மைக் கண்டு அச்சம் அடையும். அவை அடியார்களுக்கு மிகவும் நல்லனவாக அமையும்.

குறிப்புரை:

நஞ்சு ஆலகாலவிடம். தேவாதியர் பாற்கடல் கடைந்த கதை யாவரும் அறிந்ததே. விடை வருது என்பதை முன்னர்க் குறிப்பிட்டார். எந்தை என்பதனை திருத்தந்தை எனினும் அமையும். அவுணர் அசுராதியர். உரு-அச்சம். “உரு உட்காகும்.......” என்பது தொல்காப்பியம். மிகை-மிகுதிப்பாடு. பூதம் சதுக்கப்பூதம் முதலியன. அவை ஆட்களை அடித்துண்ணும் என்பர்.

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

சிவபிரானார் ஒளிமிக்க வரிகள் கொண்ட புலித்தோலை உடுத்தி கௌபீனம் தரித்து, திருமுடியில் கங்கையை இருத்தி வந்து எனது உள்ளத்தில் குடிகொண்டுள்ளார். அதனால், கொலைத் தொழில் கொண்ட சிங்கம், புலி மற்றும் மூர்க்கமான யானை, பன்றி, கொடிய நாகம் மற்றும் கரடி மனிதத் தன்மை உடைய குரங்கு முதலிய யாவும் தீங்கு விளைவிக்க மாட்டா. நன்மையையே செய்யும். சிவனடியார்களுக்கு நன்மை பயக்கும். மிகவும் நல்லனவாக அமையும்.

குறிப்புரை:

கேளல்=பன்றி அதன் தோல். கோளரி=கொலைச்சிங்கம், உழுவை=புலி, ஆளரி=மனிதன் போன்ற குரங்கு.

சிவபெருமான் புலித்தோல் முதலியவற்றை அறிந்த வரலாறு.

தாருக வனம் என்பது ஒரு வனம். அதில் வாழ்ந்த முனிவர்கள் அபிசார வேள்வி செய்தனர். அதனை அடக்க தாம் பிச்சாடனராகவும், திருமாலை மோகினியாகவும் ஆக்கி அங்கு கூட்டிச் சென்றார். முனிவர்களும் முனியத்தினர்களும் தம்நிலை மாறினர். கோபங்கொண்டு புலிமுதலியவற்றை விடுத்தர். சிவனார் புலியைக் கொன்று அதன் தோலைப் போர்தினார். ஏனையவற்றையும் கொன்றருளினார். உண்மை அறிந்த முனிவர்களும் பின்பு தமது போக்கை மாற்றிக் கொண்டனர்.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக

விடையேறு செல்வ னடைவார்

ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்

உளமே புகுந்த வதனால்

வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்

வினையான வந்து நலியா

அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

செப்பினை ஒத்த இளைய திருத்தனங்களை உடைய உமாதேவியாரைத் தமது இடப்பாகத்தில் வைத்தருளியவரும், எருது வாகனத்தில் அமர்ந்து செல்பவரும் மற்றும் ஒப்பற்ற பாலச் சந்திரனையும், கங்கா நதியையும் தமது திருமுடியில் வைத்துள்ளவருமாகிய சிவபெருமானார், எமது உள்ளத்தில் குடிபுகுந்திருக்கின்றார். அதனாலே, சூடும் குளிரும் வாதரோகமும் அதிக பித்தரோகமும் பிற

தீயவினையும் வந்து வருத்தமாட்டாவாம். அவை சிவனடியார்களுக்கு மிக நன்மையையே செய்யும்.

குறிப்புரை:

அம்மையாரின் திருத்தனத்திற்கு அழகிய செப்பை உவமை கூறியருளினார். அம்மை அடியார் வேண்டுவனவற்றை தந்தருளுதலால் நன்மங்கையானார். செல்வன் என்றது சிவஞானச் செல்வத்தை. “செல்வாய செல்வம் தருவாய் நீயே” என்றும் சான்றோர் கூறுவர். அப்பு = நீர் அது கங்கா நதியை உணர்த்திற்று. “அப்பணி செஞ்சடை ஆதிபுராதனார்” என்பது திருமந்திரம்.

வினை என்று இங்கு குறிப்பிடப்பட்டவை சஞ்சித வினையையும் பிராத்த வினையுமாம். சித்த வைத்திய நூலார் வாதம் பித்தம் சிலேடம்.

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து

மடவாள்த னோடும் உடனாய்

வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்

உளமே புகுந்த வதனால்

ஏழ்கடல் சூழி லங்கை அரையன்ற னோடும்

இடரான வந்து நலியா

ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

சிவபிரான் மன்மதனை நீறாகும்படி தமது கண்பார்வையால் தகித்தருளியவர். ஒளி பொருந்திய இளம் பிறையையும் வன்னி கொன்றை மலர்களையும் சூடியவர். உமாதேவியாருடன் எருது வாகனத்தில் இவர்ந்து திரிபவர். அவர் அடியானாகிய எனது உள்ளத்தில் புகுந்து உறைகின்றார். அந்தக் காரணத்தால், கடல் சூழ்ந்த அரயனாகிய இராவணாதியர்களால் துன்பம் ஏற்பட்டு வருத்த மாட்டா. மற்றும் ஆழ்கடல் கோளும் உண்டாக மாட்டா. பிற துன்பங்களும் போந்து வருத்தமாட்டா. அவை எல்லாம் நல்லனவேயாகும். அடியார்களுக்கு மிக நன்மை பயக்கும்.

குறிப்புரை:

மன்மதன் விருப்பினை அளிப்பவன். ஆதலால் வேள் என்றார். கந்தபுராணத்தில் காமதகனப் படலம் என்றொரு பிரிவு வந்துள்ளது. அங்கு விபரமாக அறியலாம். இங்கு மிகவும் சுருக்கமாகத் தருகின்றோம். ஒருமுறை பரம தேவர் மன்மதனை அழைத்தார். “நீ கைலையங்கிரிக்குச் சென்று, யோகில் இருக்கும் பரமசிவனார் மீது பூங்கணைகளைத் தொடுத்து ////////////” என்றார். மன்மதன் யான் வருந்துவதைக்

காட்டிலும் யான் இறந்துபடுவதே மேலான காரியம் என்று எண்ணினான். இறைவன் திருப்பார்வையால் வெந்து சாம்பலானான். மன்மதன் மனைவி இரதி தேவி வேண்டுகோளின்படி அவளுக்கு மட்டும் மன்மதன் காட்சி கொடுப்பான் என்று கூறப்பட்டது. மன்மதன் வரலாறு வாமந பாகவத், விஷ்ணுபுராணங்களிலும் சற்று வேறுபடக் கூறப்பட்டுள்ளது.

ஏழ்கடல் என்பதனைப் பின்வருமாறு கூறுவர். உவர்க்கடல், நன்னீர் கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், தேன் கடல் முதலியனவாம்.

பண்டை நாளில் இராவணன் இலங்கையை ஆண்டான். அவன் மனைவி சிறந்த சிவபக்தை.

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

பலபல வடிவங்களை எடுக்கும் எங்கள் சிவபிரானார், உமாதேவியாரை இடது பாகத்தில் கொண்டுள்ளார். திருமுடிமேல் கங்காதேவியையும், மற்றும் எருக்கலம் பூவையும் அணிந்துள்ளார். அவர் அடியேனது மனத்தின்கண் குடிபுகுந்து இருக்கின்றார். அதனாலே, தாமரை ///////// வேதங்களாலும் ஏனைய தெய்வங்களாலும் விரைந்து செல்லும் காலத்தினாலும் அலைமோது கடல்களாலும் கேடேதும் ஆகாவாம். யாவுமே நல்லனவாகும். அடியார்க்கு எல்லாம் நல்லனவாம்.

குறிப்புரை:

பரன் - சிவபெருமான் மேலோன். பலபல பல வேடம். இறைவன் ஆன்மாக்கள் பொருட்டு பல வடிவங்களைக் கொண்டுள்ளார். அவற்றுள், சந்திரசேகரர், உமாசேகர், வருஷபாரூடர், சபாநாயகர் (நடேசர்) கல்யாணசுந்தரர், பிச்சாடனார், காமாரி, காலாரி, திரிபுராரி, மாதங்காரி, வரீபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீஸ்வரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரர், நீலகண்டர், சக்கரதாரனர்,

சோமாஸ்கந்தர், ஏகபாகர், சுகாசனர், தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்பன இடம்பெறும். நாரி=பெண். தேவர்=ஒளியுருவினர்.////////

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு

குணமாய வேட விகிர்தன்

மத்தமு மதியு நாக முடிமே லணிந்தென்

உளமே புகுந்த வதனால்

புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்

திருநீறு செம்மை திடமே

அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியா ரவர்க்கு மிகவே.

பொழிப்புரை:

பூங்கொத்துக்களை சூடிய உமையம்மையாருடன், காட்டில் பாசுபதம் பெறற்காக மாதவம் புரிந்த அருச்சுனனுடன் ஆடல் புரிந்து அதனை அவனுக்குத் தந்தருளிய உத்தம குணங்களை உடைய சிவபிரானார், பலபல வேடங்களை உடையவர். அப்பெருமான் ஊமத்தமலரினை அணிந்துள்ளார். அவர் எனது உள்ளத்தில் குடிகொண்டுள்ளார். தலைவராகிய அவரது திருநீறு புத்தரையும் சமணரையும் சொற்போரில் தோல்வியைத் தழுவச் செய்தது. இது வாய்மையும் உறுதியுமாகும். அதனால் திருத்தொண்டர்களுக்கு மிகுதியும் தீயனவும் நல்லனவாகி அமையும். அடியாருக்கு நலமே விளையும்.

குறிப்புரை:

கொத்து பூங்கொத்து

குழல்-கூந்தல். விஜயன் பாண்டவருள் ஒருவனாய அருச்சுனன் பார்த்திபர்க்கு பாசுபதம் கொடுத்தானை என்பது தோவாரம் அண்ணல் திருநீறு என்று இயைக்குக. பௌத்தம் சமணம் என்ப புறச்சமயங்களாகும். பாண்டியனின் வெப்பு நோயையும் கூனையும் மாற்றியது விபூதி. சமணர் வாதத்தில் தோல்வி கண்டது வெளிப்படை. விகிர்தர் = பல பல வேடங்களை உடையவர். “மின்னாருருவ விகிர்தா போற்றி” என்று மணிவாசகப் பெருமான் கூறுவர். இறைவன் அலகிலா விளையாட்டு உடையவனாம்.

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ

நான்முகன் ஆதியாய பிரமா புரத்து

மறைஞான ஞான முனிவன்

தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து

நலியாத வண்ணம் உரைசெய்

ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்

அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

பொழிப்புரை:

தேன் சிந்தும் கருப்பஞ் சோலையோடு, சிவந்த நெல்லும் பிரமனாதியர் பூசித்தும், ஆகிய பிரமாபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேதமுணர்ந்தவர் திருஞானச்சம்பந்தப் பிள்ளையார். அவர் கிரகங்களும் விண்மீன்களும் திருத்தொண்டரை அடைந்து வருத்தாவண்ணம் திருவாய் மலர்ந்தருளிய நன்மை பயத்தற்கு ஏதுவாய் இக் கோளறு திருப்பதிகத்தை ஓதும் திருத்தொண்டர், மேலுலகெய்தி, அரசராய் ஆட்சி புரிவர். இது நமது ஆணையாகும்.

குறிப்புரை:

ஆலை - கரும்பு. புலவோர்கள் நாட்டின் சிறப்பைக் கூறும் போது கன்னலும் செந்நெல்லும் கலித்து வளர்பதி என்று கூறுவர்.

துன்னி - நெருங்கி

பிரமபுரம் இது திருஞானச்சம்பந்தப் பிள்ளையார் திரு அவதாரம் செய்த ஊர். இவ்வூர் பன்னிரண்டு திருப்பெயர்களைக் கொண்டது.

பிரமபுரம் வேணுபுரம் புகலி பெருவெங்குருநீர்ப் பொருவில் திருத்தோணிப்புரம் பூதராய் சிரபுரமுன் வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயது பரவு திருக்கழுமலமாப் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

பிரமபுரத்தில் மிகுதியும் செந்நெல்லும் கரும்பும் வளர்தலால் அப்பதி செல்வச் சிறப்பு வாய்ந்ததாம்.

நலிதல் = வருத்துதல் சொன்மாலை = பாமாலை.

அது கோளறு திருப்பதிகமாம். ஆணை சத்தியம்.

சுபம்.